இணைப்பு

[475..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 4க்கான விடையைக் காண்க.

தமிழ் ஆட்சி மொழிக்குழு செய்துள்ள பணிகள் பின் வருமாறு;

(1) 1957-ல் ஆட்சி சொல்லகராதி ஒன்றை வெளியிட்டது. அதன் திருத்தியமைத்த பதிப்புகள் 1962, 1971-ல் வெளியிடப் பட்டன.

(2) தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கியதோடு அதனை உற்பத்தி செய்து அரசு அலுவலகங்களுக்கு வழங்க ஆவன செய்தது.

(3) ஒவ்வொரு துறைக்குமுரிய சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் ஆகியவற்றை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட ஆவன செய் துள்ளது.

(4) 46 துறைகளுக்குரிய சிறப்பு சொற்கள், துணையகராதி களை வெளியிட்டது.

(5) துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தை நான்கு நிலைகளில் நிறைவேற்ற ஆவன செய்துள்ளது,

(6) தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றை உருவாக்கி 1965-ல் வெளியிட்டது. அதன் இரண்டாம் பதிப்பு 1977-ல் வெளியிடப் பட்டது.

(7) மாவட்ட அலுவலக நடைமுறை நூலை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டது.

(8) அரசு அலுவலகங்களிலுள்ள தமிழ் தட்டச்சர் களுக்கு தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி பெற வழி வகை செய்தது.

(9) தமிழில் போதிய தேர்ச்சியில்லாத அரசு பணியாளர் களுக்கு பயிற்சி அளித்து தேர்வு நடத்தவும் தமிழில் வரைவுகள் குறிப்புகள் எழுத பயிற்சியளிக்கவும் வழி வகுத்தது.

(10) தமிழ் தட்டச்சுக்களைப் பெருமளவில் உற்பத்திச் செய்து சீராகவழங்கி ஆங்கில தட்டச்சுக்களைத் திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்தது.

(11) தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை உருவாக்கியது.

(12) இளநிலை ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ் அலுவலர்களுக்குத் தமிழ் திட்டப் பயிற்சியளிக்க வகை செய்துள்ளது.

(13) தமிழ் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கென ஆய்வுத் தனி அலுவலர்களை நியமிக்க ஆவன செய்தது.

(14) அரசு சார்புடைய நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் தமிழ்த் திட்டத்தை நிறைவேற்ற வழி செய்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS